**செலசினெ தொலைக்காட்சி நிறுவகம் - 2021**

-------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப கணக்கீட்டு மென்பொருள் முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் கணக்கீட்டு மென்பொருள் முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், ரூபா 19,321,400 கிரயத்திலான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டில் இருந்தன. குறித்த நியமத்தின் 79 (ஆ) பிரிவின் பிரகாரம் பயன்பாட்டில் இருந்த முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த கொண்டுசெல்லும் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், குறித்த தொகை நிதிநிலை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் படிமுறையாக சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, குறித்த நியமத்தின் 79 (ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 755,271 தொகையான 10 கடன்பட்டோர் மீதிகளின் மொத்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ள வர்த்தகக் கடன்பட்டோரில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் அல்லது ரூபா 755,271 தொகையைப் பெற்றுக்கொண்டமைக்கான காரணம் இனங்காணப்பட முடியாதிருந்ததுடன் இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தருணத்தில் கூட இதனை இனங்காண முடியாதிருந்தது. எனவே இது நிதிக்கூற்றுக்களின் வர்த்தக கடன்பட்டோரிலிருந்து கழிக்கப்பட்டது. 2023 ஆம் | கடன்பட்டோரின் பெறுவனவுகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டில் தெளிவுபடுத்தி சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | ரூபா 10,668,520 தொகை ஆண்டின் போது நிறுவகத்தால் அறக்கட்டளைப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான அட்டுறு செலவினம் ரூபா 4,850,000 ஆகும். நடைமுறைப் பொறுப்புக்களில் குறித்த தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஆண்டுக்கான நட்டம் ரூபா 4,850,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிறுவகத்தால் ஆண்டின் போது ரூபா 10,668,520 தொகை அறக்கட்டளை பணிகளிற்காகச் செலவிடப்பட்டது. இது தொடர்பாக எந்த ஒரு பணத்தையும் செலுத்த வேண்டாம் என நிறுவக நிர்வாகம் தீர்மானித்திருந்தது, மேலும் இது தொடர்பாக பணம் செலுத்தவோ அல்லது ஒதுக்கவோ கூடாது என தீர்மானம் எடுக்கப்பட்டது. | கணக்குகளிற்கு செலுத்தப்பட்ட சரியான தொகையை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | சேமிப்பு கணக்கு மீதி | 26,817,817 | 27,483,194 | 665,337 | வங்கி கூற்றை தயாரிக்கும் போது இது கண்டுபிடிக்கப்பட்டது, அப்போது காசுப் புத்தகம் கணக்கிணக்கம் செய்யப்பட்டது. 2022 ஏப்ரலில் காசுப் புத்தகத்தில் தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்பட்டு சரியான மீதி காட்டப்பட்டதுடன் அங்கே தொடர்புடைய குறிப்பொன்று இருந்தது. | சரியான தொகையை கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 32,300,288 | 28,884,905 | 3,415,333 | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் புத்தகங்களில் முன்கொண்டுவரப்பட்ட மீதிகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் உண்மையான பொறுப்புக்களை கணக்குகளில் காட்டுவதற்கு | சரியான தொகையை கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வங்கி மீதி | - | வங்கி மீதி உறுதிப்படுத்தல் | வங்கி மீதி உறுதிப்படுத்தலை நேரடியாக அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு கோருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நேரடியாக அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு மீதி உறுதிப்படுத்தல் கோரப்பட வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 6 வருடங்களில் இருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 2,739,878 தொகையான 04 கணக்குகளின் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் ரூபா 218,396 தொகையான 03 செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் மீளாய்வாண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது, பல ஆண்டுகளாக முன்கொண்டவரப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சில மீதிகள் எங்களால் அவதானிக்கப்பட்டன. இது 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யப்பட்டது. | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தாமதமின்றி சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபார பெறவேண்டியவைகள் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகளை அந்த நிறுவனங்களின் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது, 03 நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மீதிகளில் ரூபா 4,465,542 ஆலும் ஒரு நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 326,518 ஆலும் 03 நிறுவனங்களிடமிருந்து செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,866,360 ஆலும் நிதிக்கூற்றுக்களில் வேறுபாடுகள் காணப்பட்டன. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபார பெறவேண்டியவைகள் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகளில் உள்ள வேறுபாடுகளை சரிபார்ப்பதற்கு தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து கணக்கிணக்கங்களை அழைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கணக்கிணக்கங்கள் கிடைத்தவுடன் சரியான தகவல்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தாமதமின்றி சரியாக எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேவைநாடும் கடன்பட்டோர் மீதி ரூபா 347,262,234 ஆக இருந்ததுடன் அதில் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 190,011,004 ஆக மொத்த கடன்பட்டோர் மீதியில் 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் நிறுவகம் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கும் மேலாக கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நிறுவகத்தால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே எதிர்பார்ப்புச் சட்டத்தின் பிரகாரம் கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான திறன் ஆபத்தில் இருந்தது. | கடனை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அதை முறையாக முகாமை செய்வதற்கும். 2022.07.12 முதல் கடன் அறவீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. காலதாமதமான கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்கனவே ஒரு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 6,611,743 தொகையான கடன்பட்டோர் மீதி மேலும் சரிபார்க்கப்பட்டு, புத்தகங்களிலிருந்து குறித்த மீதியை பதிவழிப்பதற்கு திறைசேரிக்கு பரிந்துரை அனுப்பப்பட்டது. எனினும் இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 347,262,234 மொத்த கடன்பட்டோர் மீதியில் 70 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 243,917,857 தொகை 03 மாதங்களை விஞ்சியிருந்த கடன்பட்டோரைக் கொண்டிருந்தது. எனினும், அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 347,262,234 தொகையான கடன்பட்டோர் மீதிக்காக உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டதுடன் சில மாத்திரமே திரும்பப் பெறப்பட்டன. | அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு மீதி உறுதிப்படுத்தல் அழைக்கப்பட வேண்டும். |
| (உ) | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இல.224, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள கட்டிடத்தின் தரைத்தளம் 2014 சனவரி 15 முதல் 2019 சனவரி 14 வரையிலான காலப்பகுதிக்கு 4660 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் | 2019 சனவரி 14 முதல் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துடன் முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவகம் முன்னைய காலப்பகுதிக்குரிய வாடகை, மின்சாரம் மற்றும் தண்ணீர் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்து வளாகத்தில் தங்கியுள்ளது. மேலும் 2014 | நிறுவனங்களுக்கிடையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், உடன்படிக்கைகளில் உள்ள காலப்பகுதி மற்றும் செலவினங்கள் குறித்தும் கவனம் செலுத்தி சட்டரீதியாக |

நிறுவகத்தால் 5 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும் குறித்த குத்தகைக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் 2021 திசெம்பர் 31 வரை குறித்த வளாகங்களிலேயே நிறுவகம் காணப்பட்டதுடன் முறையான உடன்படிக்கைக்குள் நுழைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. செலசினெ நிறுவகத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்த 2022.05.25 ஆம் திகதிய என்எவ்சீ/103/04/01 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் ரூபா 10,455,000 தொகை கட்டிட வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மாதாந்த மதிப்பீடுகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டும். எனினும் குறித்த பிரச்சனையை முறையாக தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சனவரி 15 ஆம் திகதிய உடன்படிக்கையின் கீழ் கட்டிடத்தின் அனைத்து நிர்மாணங்களும் பராமரிப்புக்களும் 2013 ஆம் ஆண்டு முதல் 2014 சனவரி வரை தங்கள் சொந்த நிதிகளைப் பயன்படுத்தி செலசினெ நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டதென தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

2019 சனவரி 14 வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 315,000 தொகை கட்டிட வாடகையாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டு 2020.12.31 வரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்பட்டது. அந்தக் கொடுப்பனவு அவர்களால் பெறப்பட்டது. செலுத்த வேண்டிய கட்டிட வாடகை, செலுத்த வேண்டிய மின்சாரம் மற்றும் தண்ணீர் உட்பட செலுத்த வேண்டிய தொகை ரூபா 4,115,798 ஆகும். விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் நிறுவகம் உடன்படிக்கைகளைச் செய்திருந்ததால், நாங்கள் ரூபா 6,349,000 ஐ கணக்குகளிற்கு எடுக்க வேண்டியுள்ளது என்பது எனது கருத்தாகும். மேலும் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

செலசினெ நிறுவகத்திடமிருந்து கட்டிட வாடகையாக மாதாந்தம் ரூபா 315,000 தொகை அவர்களால் பெறப்பட்டதுடன் தண்ணீர் மற்றும் மின்சார கட்டணம் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

சிக்கல்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி.பி. 371(2) (ஆ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பிஈடி/01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | (i) ஒரு குறிப்பிட்ட பணிக்கு வழங்கப்படக்கூடிய செயல்நிமித்த கட்டுநிதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஐ விஞ்சக்கூடாத போதிலும் குறித்த எல்லையைத் தவிர்ப்பதற்காக ஒரே வேலையின் வெவ்வேறு பிரிவுகளுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. 16 சந்தர்ப்பங்களில் ஆகக்கூடிய எல்லையை மீறி வழங்கப்பட்ட தொகை ரூபா 2,432,000 ஆகும். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பிஈடி/01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட ரூபா 100,000 முற்பணம் நிறுவகத்தின் தன்மை காரணமாக ஒரு முழு தயாரிப்பிற்கும் போதுமானதாக காணப்படவில்லை; நாம் தொலைக்காட்சி தயாரிப்புக்களில் ஈடுபட வேண்டும். எனினும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் ரூபா 100,000 செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டதுடன் குறித்த நிதிப் பிரமாணத்தை பின்பற்றுவதற்கான அதிகபட்ச முயற்சியுடன் உற்பத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பதவிநிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களிற்கு மாத்திரமே செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் முற்பணத்தைப் பெற்றிருந்த உத்தியோகத்தரின் முழுப்பெயர் முன்பணப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்காததால், அது பதவிநிலை உத்தியோகத்தரா | 2023 ஆம் ஆண்டு முதல் முற்பணம் பெற்ற உத்தியோகத்தரின் முழுப் பெயரையும் முற்பண பதிவேட்டில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பதை இனங்காண முடியாதிருந்தது. மேலும் பெற்றுக்கொண்ட முன்னைய முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் முன்னைய முற்பணத்தைப் பெற்றிருந்த அதே உத்தியோகத்தரிற்கு முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்டம் குறைவடைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கு செலுத்தப்படக்கூடிய மிகையூதியத் தொகை ரூபா 5000 ஆக உள்ள போதிலும் 2021 ஏப்ரலில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக 63 ஊழியர்களுக்கு ரூபா 812,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டிலிருந்து மிகையூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும், 2021.12.15 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2 (1) (அ) பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஆண்டிற்காக வரி விதிக்கக்கூடிய வருமானத்தை உழைத்த தனிநபர்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் வருமான வரி செலுத்த வேண்டிய போதிலும் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரியை செலுத்துவதற்கு 1982 பெப்ரவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்ட செலசினெ நிறுவகத்தால் | இந்த நிறுவகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பங்குதாரராக பதிவு செய்யப்பட்டிருந்தது. வருமான வரி செலுத்துவதற்கான வகையை தெளிவுபடுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது, அதன் விளைவாக, வருமான வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவகம் அரசாங்க உடமையாக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டவுடன், நிறுவனங்களின் வகையின் கீழ் வருமான வரியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு தனிநபர் செலுத்தும் பொருளாதார சேவைக் கட்டணங்கள், தொடர்புடைய ஆண்டின் தொடர்புடைய காலாண்டில் அதே தனிநபர் செலுத்த வேண்டிய வருமான வரியிலிருந்து எதிரீடு செய்யப்பட முடியும். நிறுவனம் தொடங்கப்பட்ட 1982 ஆம் ஆண்டு முதல் வருமான வரி செலுத்தாத காரணத்தால், ரூபா 3,599,744 மீதி நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஏறத்தாழ 10 வருட காலப்பகுதியில் பெறவேண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்களாகக் காட்டப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணங்கள் வருமான வரியிலிருந்து எதிரீடு செய்யப்பட முடியும் என்பதால், அது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் நடைமுறைச் சொத்துக்கள் சரியாக காட்டப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 6,841,002 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 29,339,593 ஆக இருந்தது. ஆகையால் நிதி விளைவு ரூபா 22,498,591 ஆல் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. 98 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 229,314,272 ஆல் வருமானம் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 முக்கிய வருமான செலவின உருப்படிகளின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் வருமானம் 98 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 229,314,272 ஆல் அதிகரித்திருந்ததுடன் பட்டியலிடப்படும் வருமானம் ரூபா 101,790,630 ஆலும் உற்பத்தி வருமானம் ரூபா 77,715,097 ஆலும் கிராபிக் மற்றும் அச்சிடல் வருமானம் ரூபா 58,683,407 ஆலும் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டுக்கான நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள் 53 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டில் ஏற்பட்டிருக்காத கட்டிடச் செலவினங்கள், வாகன வாடகை, கட்டிட வாடகை, நலன்புரிச் செலவினங்கள், தொலைபேசிச் செலவினங்கள் மற்றும் மிகையூதியம் போன்ற ரூபா 22,892,452 தொகையான செலவினங்கள் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட வேண்டியிருந்ததுடன் மேலதிக நேர செலவினங்கள், அலுவலக பராமரிப்பு செலவினங்கள், அச்சிடல் செலவினங்கள், தலைவரிற்கான படிகள் என்பன அதிகரித்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் 50 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் நிதிச் செலவினங்கள் 100 சதவீதத்தாலும் ஏனைய செலவினங்கள் 850 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. தொண்டு சேவைகளுக்காக முன்னைய ஆண்டில் காணப்படாத ரூபா 5,818,520 மீளாய்வாண்டில் ஏற்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 411 சதவீதத்தை

பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 925,403 ஆல் சட்டக் கட்டணங்கள் அதிகரித்தமை ஏனைய செலவினங்களின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுக்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 1.45 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் இது 1.28 வரை குறைவடைந்துள்ளது. மேலும் நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு தொகையை விஞ்சி நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தமை இந்த இந்த வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கான மொத்தலாப விகிதம் 19 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் 7.5 சதவீதத்தால் 26.5 வரை அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டுக்கான தேறியலாப விகிதம் – 12.5 சதவீதமாக (எதிர்மறை) இருந்ததுடன் மீளாய்வாண்டில் இது -1.5 சதவீதம் (எதிர்மறை) வரை அதிகரித்துள்ளது. மேலும் முன்னைய ஆண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 106,755,154 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டில் ரூபா 92,181,282 ஆக குறைவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டின் கடன் உரிமை மூலதன விகிதம் 0.17 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் இது 0.19 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தொடர்ச்சியான நட்டங்கள் காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி குறித்த அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டில் நிறுவகத்தில் ரூபா 11,988,000 பண மோசடி செய்து 9 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் இந்த வழக்குக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டிருக்கவில்லை. நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அறிக்கை மாத்திரமே இருப்பதால் குறித்த மீதி மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபா 11,988,000 நிதி மோசடிக்கு எதிராக சட்டமா அதிபரால் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 ஆம் ஆண்டில் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக நிறுவகம் சார்பில் ஆசட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கான முதன்மை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | சொத்துக்களை சரியாக கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய 10/1682/407/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து விளம்பரங்களையும் செலசினெ நிறுவகம் மூலம் செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த அதிகாரத்திற்காக 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும் குறித்த பணிக்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவத்தினால் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலும் அண்மைக் காலத்திலும் ஏற்பட்ட நட்டங்கள் காரணமாக, 2010 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய 10/1682/407/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்படும் பொருட்டு மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவைப்பாட்டை நிறுவகம் நிறைவேற்றத் தவறியிருந்தது. எனினும் மனித மற்றும் பௌதீக வளங்களை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மனித வளம் மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்த வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொவிட் 19 மூன்றாவது அலையை அடக்குவதற்காக, ரூபா 10,668,520 தொகை தொலைக்காட்சி விளம்பரங்களை தயாரிப்பதற்காகவும், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியாக பதக்கங்கள் மற்றும் சின்னங்களை (badges) அச்சிடுவதற்காகவும், ”ரட்டவாசி யுதுகம” கூட்டு சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாகப் பங்களித்த தரப்பினருக்கு ஊக்கமளிக்கும் விதமாகவும் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2043 பதக்கங்கள் மற்றும் சின்னங்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டில் நிறுவகம் ஏற்படுத்திய நட்டம் ரூபா 6,841,002 ஆக இருந்ததுடன் இந்த சூழ்நிலையில் முறையான திட்டம் இல்லாமல் தொண்டு பணிகளைச் அமுல்படுத்தியதன் விளைவாக நிறுவகத்திற்கான ரூபா 3,827,518 இலாபம் ஈட்டும் திறன் தவறவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக, நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட பல கடமைகள் நிறுத்தப்பட வேண்டியிருந்தன. கொவிட் 19 மூன்றாவது அலையை அடக்குவதற்கு நேரடியாக பங்களித்த தரப்பினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் ‘ரட்டவாசி யுதுகம’’ கூட்டு சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தொடர் பிரசாரத்தின் தயாரிப்புக் கிரயத்தின் மீதான இலாபத்தின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினத்தை ஈடுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் அதனைத் தீர்க்க முடியாதிருந்தது. மேலும் குறித்த கூட்டு சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதுபோன்ற தொண்டுப் பணிகளின் போது நிறுவகத்திற்கு ஏற்படும் ஒவ்வொரு நட்டத்தையும் தவிர்ப்பதற்கு நிறுவக நிர்வாகம் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை எடுக்கும். | தொண்டு பணிகளை முறையான திட்டத்தின் பிரகாரம், அதிகபட்ச சிக்கனத்துடன், செலவினங்களைக் குறைக்கும் வகையில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான பெறுகை நடைமுறையின் மூலம் தேவைக்கேற்ப பொருத்தமான கட்டிடத்தைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக, 6850 சதுர அடி பரப்பளவில் உள்ள | ரூபா 21 மில்லியன் தொகை குறித்த கட்டிடத்தின் புனரமைப்பிற்காக செலவிடப்பட்டதுடன் இதற்கு | நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| கட்டிடமொன்றிற்கு நிறைய சீரமைப்புகள் தேவைப்பட்ட போதிலும் நிறுவகத்தால் அக் கட்டிடம் ரூபா 675,000 மாதந்த வாடகைக்கு 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெறப்பட்டது. கட்டிடத்தின் உரிமையாளருக்கும் நிறுவகத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளை பரீட்சிக்காமலும் கட்டிடத்தை மேலும் சீரமைக்க வேண்டுமா என்பதைக் கண்டறியாமலும், ரூபா 21 மில்லியன் தொகை மற்றும் அதற்கு மேலதிகமாக மேலும் 8 மில்லியனை விஞ்சிய தொகை கட்டிடத்தை சீரமைப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது. மேலும் 6 மாதத்திற்கான கட்டிட வாடகையின் ரூபா 4,050,000 மொத்தத் தொகை கட்டிடத்தின் உரிமையாளருக்கு மீளப்பெறத்தக்க வைப்பாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 23,000,000 தொகையான மூன்று நிலையான வைப்புக்கள் இது தொடர்பாக தேவையான பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நிறுவகத்தால் காசாாக்கப்பட்டிருந்தது. இதனால் ஏறத்தாழ ரூபா 1,066,424 வட்டி வருமானம் நிறுவகத்திற்கு நட்டமாகியிருந்தது. | மேலதிகமாக ரூபா 8,750,141 தொகை மேலதிக சீரமைப்புக்களுக்காக செலவிடப்பட்டது. அந்தத் தருணத்தின் தேவைக்கேற்ப, அவ்வப்போது சீரமைப்புப் பணிகளுக்காக நிறுவகப் பணம் செலவிடப்பட்டது. இது தொடர்பில் வெகுசன ஊடக அமைச்சினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், எதிர்காலத்தில் இவ்வாறான அவசர தீர்மானங்களை தவிர்ப்பதற்கு நிறுவக நிர்வாகம் தீர்மானித்திருந்தது.<br><br>கட்டிடத்தின் உரிமையாளருக்கும், நிறுவன நிர்வாகத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத்தை கொள்வனவு செய்த போது, 6 மாத கட்டிட வாடகையின் கூட்டுமொத்தம் ரூபா 4,050,000 தொகை மிளப்பெறத்தக்க வைப்பாக செலுத்தப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பதவியணியினரில் 39 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 06 நிரந்தர ஊழியர்கள், 26 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள், 01 அமைய அடிப்படையிலான ஊழியர் மற்றும் 01 பயிற்சி பெறுபவர் என அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத 34 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கெள்ளப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டுக்கான பதவியணி தேவைப்பாட்டை தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன் நிரந்தர பதவியணியினர் மற்றும் ஒப்பந்த பதவியணியினரை உரிய முறையில் பணிக்கமர்த்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் பதவியணியினரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவைநாடுநர்கள் மற்றும் வெளித் தரப்பினருடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது, சட்ட ஆவணங்கள், ஆலோசனை | ஒரு சட்ட உத்தியோகத்தரின் பதவி நிறுவகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படாததுடன் ஒரு சட்ட | நிறுவகத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமானவாறு சட்ட சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும், |

சேவைகள் மற்றும் ஊழியர்களின் நிர்வாகம் தொடர்பான விவகாரங்களை தயாரிப்பதற்காக வெளியக சட்டத்தரணிகளின் சேவை நிறுவகத்தால் பெறப்பட்டதுடன் இது தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 1,150,403 செலவிடப்பட்டிருந்தது. நிறுவகம் தொடங்கப்பட்டதில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் சட்ட உத்தியோகத்தர் பதவியொன்று காணப்படவில்லை, இதன் விளைவாக, சேவைநாடுநர்களுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்ளுதல், கடன்களை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் போன்ற சட்ட விவகாரங்கள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாதிருந்ததுடன் செயற்பாடுகளின் வினைத்திறன், நிதி நிலைமையின் சாதகமான தன்மை மற்றும் சட்ட அபாயம் அதிகரித்தல் என்பவற்றிற்கு இது தாக்கமளித்தமிருந்தது.

உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது அவர்கள் நீதிமன்றங்களில் ஆஜராவதில்லை. அப்போது வெளியக சட்டத்தரணியின் சேவையைப் பெற வேண்டியிருந்தது. எனினும் வெளியக சட்டத்தரணியின் சேவையைப் பெற்றால் அதற்கு மாத்திரமே கொடுப்பனவை மேற்கொள்ள முடியும். 2023 ஆம் ஆண்டில் வெகுசன ஊடக அமைச்சின் சட்ட அதிகாரியின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் அவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. இதுபோன்ற பலவீனங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அபாயத்தைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.